# அம்ரிதா பல்கலைக்கழகத்தின் 13வது பட்டமளிப்பு விழா

உலக தரவரிசை முகமைகளால் இந்தியாவில் நம்பர் 1 தனியார் பல்கலைக்கழகமாக தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கும் அம்ரிதா பல்கலைக்கழகம், தன்னுடைய 13வது பட்டமளிப்பு விழாவில் 2,212 பெண்கள் உள்பட மொத்தம் 4,477 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கியது.

பட்டம் பெற்ற மாணவர்களில் பெருமளவு எண்ணிக்கையில் (1,896 பேர்) பி.டெக் பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அதையடுத்து M.Tech (473), MCA (196), MBA (191), BCA (188), B.COM (162), B.SC (131), MBBS (95) மற்றும் இதர பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பொறியியல், வணிகம், மருத்துவம், உயிரி தொழில்நுட்பம், நானோதொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல், பல் மருத்துவம், செவிலியர் துறை, ஆயுர்வேதம், மருந்தாக்கம், சமூகப்பணி, தொலைத்தொடர்பு மற்றும் ஆசிரியர் கல்வி போன்ற அனைத்து பிரிவுகளையும் சார்ந்த மாணவர்கள் அங்கம் வகித்தனர்.



சிறப்பு விருந்தினராக வந்திருந்த, இந்திய அரசு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, செயலாளர், பேராசிரியர் அஷுதோஷ் ஷர்மா பட்டமளிப்பு உரை ஆற்றுகையில், "இந்திய தனது உயர்கல்வியை நிறுவனங்களின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்த வேண்டும் என்பதுடன் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களையும் உருவாக்க வேண்டும். எங்கும் வன்முறை அதிகரித்துவரும் உலகில் மாணவர்கள் ஒரு புதிய மாற்றத்தை முகவர்கள் ஆக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அம்ரிதா பல்கலைக்கழகத் தலைவர் சுவாமி அமிர்தஸ்வரூபானந்தா பூரி வாழ்த்துரை ஆற்றுகையில், அம்ரிதா மாணவர்களுக்கு சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலிருந்து மற்றவர்களுக்கு சேவையாற்றுவதில் தங்களுடைய கவனத்தை திசைதிருப்புவதற்குரிய திறன் உள்ளது என்று உறுதியாக நம்புவதாக தெரிவித்தார்.

அம்ரிதா பல்கலைக்கழகம் துணைவேந்தர் டாக்டர். வெங்கட் ரங்கன் பல்கலைக்கழகத்தின் ஆண்டு அறிக்கையை அளித்தார். அம்ரிதா பல்கலைக்கழக மருத்துவ இயக்குநர் டாக்டர் பிரேம் நாயர் பட்டமளிப்புவிழாவில் வரவேற்புரையாற்றினார். அம்ரிதா பல்கலை இணைவேந்தர் பிரம்மச்சாரி அபயாம்ரித சைதன்யா, கார்பரேட் தொழில் தொடர்புகள் இயக்குநர் பேராசிரியர் இ.பரமேஸ்வரன், பதிவாளர் டாக்டர் கே. சங்கரன், பொறியியல் பிரிவு தலைவர் டாக்டர். சசாங்கன் ராமநாதன் மற்றும் ஆராய்ச்சி பிரிவு தலைவர் டாக்டர். சாந்தி நாயர் ஆகியோர் நிகழ்ச்சியில் உடனிருந்தனர்.